**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 151** **நாள்: 12.05.2026**

## பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் செல்லப்பிராணிகளுக்கான உரிமம் பெறுவதற்கான காலக்கெடு 15.06.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்ட விதிகளின்படி பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் செல்லப்பிராணிகள் வளர்ப்பதற்கான உரிமம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், நாய் மற்றும் பூனை ஆகிய செல்லப்பிராணிகளுக்கான உரிமம் பெறும் நடைமுறையை மேலும் விரைவுப்படுத்தவும், இதன்மூலம் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் எளிதாக தங்கள் செல்லப்பிராணிகளுக்கான உரிமத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை (ஆன்லைன் போர்டல்) பயன்பாட்டில் உள்ளது.

செல்லப்பிராணியின் உரிமையாளர்கள் தங்கள் செல்லப்பிராணிகளுக்கு உரிமம் பெறுவதற்கான காலக்கெடு 14.12.2025 வரை வழங்கப்பட்ட நிலையில், இதுவரை 78,392 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 9,656 உரிமங்கள் புதுப்பிக்கப்படாத நிலையில் தற்போது 68,736 செல்லப்பிராணி உரிமங்கள் நடைமுறையில் உள்ளன.

அனைத்து செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களும் உரிமம் பெறுவதை உறுதி செய்திடும் வகையில், இந்த காலக்கெடு 15.06.2026 வரை மேலும் நீட்டிக்கப்படுகிறது. மேற்கண்ட காலக்கெடுவுக்குள் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் தங்கள் செல்லப்பிராணிகளுக்கான உரிமத்தைப் பெற்றிடவும், புதுப்பிக்கப்படாத உரிமங்களைப் புதுப்பித்துக் கொள்ளவும் மாநகராட்சியின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது. 16.06.2026 முதல் உரிமம் பெறாத நாய் மற்றும் பூனை ஆகிய செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு ரூ.5000/- வீதம் அபராதம் விதிக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் எளிதில் பயன்படும் வகையில் மைக்ரோ சிப்பிங் பொருத்தும் பணி மற்றும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தும் பணி மற்றும் உரிமம் பெறுவதற்கான வழிகாட்டுதல்கள் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் திருவொற்றியூர், மணலி மண்டலத்திற்குட்பட்ட செட்டிமேடு, மாதவரம், தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட செட்டிமேடு மற்றும் கண்ணப்பர் திடல் ஆகியவற்றில் உள்ள நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்கள், திரு.வி.க. நகர், புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, நுங்கம்பாக்கம், கண்ணம்மாப்பேட்டை மற்றும் மீனம்பாக்கம் ஆகியவற்றில் உள்ள செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்கள் என 11 மையங்களில் இலவசமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, நாய் மற்றும் பூனை ஆகிய செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் 15.06.2026க்குள் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதள சேவையை பயன்படுத்தி செல்லப்பிராணிகளுக்கான உரிமத்தைப் பெற்றிடவும், புதுப்பிக்கப்படாத உரிமங்களை புதுப்பித்துக் கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**